மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | OS. 189/2022 |
| பெயர் | : | சீத்தாலெட்சுமி (PW2) |
| க/பெ | : | சுடலைமணி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24 th day of April 2024

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் முதலில் வழக்கு தாக்கல் செய்திருந்ததால் பின்னர் நான் வழக்கு தாக்கல் செய்தேன். இந்த வழக்கின் தபசில் 1 வது அயிட்டம் சொத்தானது நத்தம் சர்வே எண். 613/3 என்று சொல்லியுள்ளேன் என்றால் சர்வே எண்களை பற்றி எனக்கு தெரியாது.

2) இந்த வழக்கின் தபசில் 2 வது அயிட்டம் சொத்தானது நத்தம் சர்வே எண். 613/4 என்று சொல்லியுள்ளேன் என்றால் சர்வே எண்களை பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கின் பிரதிவாதிகள் எங்கள் சர்வே நம்பரை போட்டுக் கொண்டார்கள். ஆதியில் தபசில் சொத்து எங்கள் பூட்டன் சண்முகத்திற்கு பாத்தியப்பட்டது. அதற்காகத்தான் சண்முகத்தின் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை வா.சா.1 ஆக தாக்கல் செய்துள்ளேன்.

3) வா.சா.1 கிரைய ஆவணத்தில் நத்தம் சர்வே எண். 613/3 , 613/4 என்று குறிப்பிடப்பட வில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சர்வே எண்களே குறிப்பிடப்படவில்லை. இரண்டு சர்வே எண்களுக்கும் அரசாங்கத்தில் இருந்து பட்டா கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான்.

4) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.17 ஆனது வழக்கு சொத்தினை என் தாத்தா 1938 ல் கிரையம் பெற்றதற்கான ஆவணம் , அதிலும் எந்த சர்வே எண்களும் குறிப்பிட வில்லை என்றால் சரிதான். ஜமீன் காலத்தில் ஏற்பட்ட ஆவணம் என்பதால் சர்வே எண்கள் குறிப்பிடப்படவில்லை. அதன் பின்னர் பட்டா பெற்றோம்.

5) பட்டா நான் சிறுவயதில் இருக்கும்போதே பெற்று விட்டார்கள். அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆனது அரசாங்கம் 613/4 என்ற சொத்தினை ஒப்படைப்பு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதே போல் 613/3 என்ற சொத்திற்கு வா.சா.ஆ.5 போல் ஒப்படைப்பு ஆவணம் கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

6) பிரதிவாதிகள் என்ன கட்சி செய்து வருகிறார்கள் என்றால் என் வீட்டை தவிர மற்ற அனைத்தும் அவருடைய இடம் என்று கட்சி செய்து வருகிறார்.என்னுடைய இடத்திற்கு வடக்கே பாக்கியராஜின் இடம் உள்ளது. என்னுடைய வீடு இருக்கும் பகுதிக்கு பிரதிவாதி எந்த உரிமையும் கோரவில்லை. என்னுடைய வீட்டிற்கு வடக்கே உள்ள குளியறை கட்டியிருக்கும் இடத்திற்கு தான் பிரதிவாதிகள் உரிமை கொண்டாடி கட்சி செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

7) எங்கள் வீடு தவிர மற்ற இடத்திற்கு தான் பிரதிவாதிகள் கட்சி செய்து வருகிறார்கள் . நாங்கள் குடியிருக்கும் வீடு வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.17 ல் குறிப்பிடப்பட்டிருக்கும் இடம் கிடையாது என்றால் சரியல்ல. அது வீட்டுடன் சேர்ந்த இடம். நான் குடியிருக்கும் இடம் வா.சா.ஆ.5 ன்படி அரசாங்கம் ஒப்படைப்பு செய்த இடம் என்றால் சரிதான், அதற்கு பின்புறமும் நாங்கள் தான்புழங்கி வருகிறோம். அந்த இடத்தை அரசாங்கம் எங்களுக்கு ஒப்படைப்பு செய்யவில்லை என்றால் எங்கள் இடம் என்று நினைத்து நாங்கள் புழங்கி வருகிறோம்.

8) எங்கள் இடம் என்று நினைத்து நாங்கள் புழங்கி வருகிறோம் என்று கூறுவதற்கு எந்த ஆவணம் தாக்கல் செய்துள்ளோம் என்றால் கிரைய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோம். வீட்டிற்கு வடக்கே நான் புழங்கி வருவதாக சொல்லும் இடத்திற்கு வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.17 ஆவணத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

9) வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.17 கிரைய ஆவணத்தில் உள்ள சொத்துக்களும் நாங்கள் புழங்கி வரும் சொத்தும் ஒன்று என்று காட்டுவதற்கு ஆவணம் உள்ளது. நாங்கள் அவ்வாறு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

10) 1வது பிரதிவாதி பாக்கியராஜின் அம்மா அவருக்கு தான செட்டில்மெண்ட் கொடுத்ததாக என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.14 தாக்கல்

செய்துள்ளேன் என்றால் வழக்கறிஞர் கொடுத்திருப்பார். 2 வது பிரதிவாதி ராயம்மாள் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் எங்கள் வீட்டிற்கு பின்னால் நாங்கள்புழுங்கிகொண்டிருப்பதாக சொல்லும் இடத்தை பொறுத்து தான் ஏற்பட்டுள்ளது என்றால் எங்கள் பூட்டன் காலத்தில் இருந்து நாங்கள் அனுபவித்து வருகிறோம். தற்போது அவர்கள் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார்கள்.

11) நான் சொல்வது போல் என் முன்னோர்களோ, நானோ அந்த இடத்தை அனுபவித்து வந்தது கிடையாது என்றால் சரியல்ல. 05.08.2020 ல் என் வீட்டிற்கு வடக்கே உள்ள இடத்தில் ஒரு பாத்ரூம் செட் போட்டோம் என்றால் இல்லை என் அம்மா , தாத்தா காலத்திலேயே அது போடப்பட்டு விட்டது.

12) 05.08.2020 ல் 1 ம் பிரதிவாதி காவல் நிலையத்தில் என் மீதும் 2 ம் வாதி மீதும் புகார் கொடுத்திருந்தார் என்றால் அவர் அடிக்கடி எங்கள் மீது புகார் கொடுப்பார்.05.08.2020 ல் செட் போட முயற்சித்தோம் என்று எங்கள் மீது புகார் கொடுக்கப்பட்டது என்றால் ஏற்கனவே செட் போட்டிருந்த இடம் சேதமடைந்திருந்ததால் செட் போட முயற்சித்தோம்.அவர் புகார் கொடுத்து தடுத்து விட்டார்.

13) 02.10.2020 ல் நான் அந்த இடத்தில் தகரம் வைத்து பாத்ரூம் கட்டி விட் டோம் என்றால் என் அம்மா காலத்திலேயே அது உள்ளது , பிரிந்திருந்ததை தகரம் வைத்து கட்டினேன். அதை அப்புறப்படுத்தச் சொல்லித்தான் 1 ம் பிரதிவாதி OS.No. 56/2021 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர் நிறைய வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

14) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ல் சொல்லியுள்ள அளவிற்கும் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.17 ல் உள்ள அளவுகள் வேறுபட்டுள்ளது என்றால் இல்லை சரியாகத்தான் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ல் சொல்லியுள்ள எல்கைக்கும் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.17 ல் உள்ள எல்கையும் வேறுபட்டுள்ளது என்றால் இல்லை.

15)என்னுடைய வீட்டிற்கு கிழக்கே தென்வடல் தெரு உள்ளது என்றால் சரிதான். ஆனால் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.17 ல் காட்டியுள்ள சொத்திற்கு கிழக்கே தென்வடல் தெருவை காட்ட வில்லை என்றால் காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 , வா.சா.ஆ.17 மற்றும் பிராதில் எல்கை

மாலில் வடக்கு பக்கம் பாக்கியராஜோ அவரது அம்மாவிற்கு பாத்தியப்பட்ட இடம் என்று காட்டவில்லை என்றால் சரிதான்.

16) என் தாத்தா ஜமீன் சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்று சொல்லியுள்ளநிலையில் அந்த சொத்து தான் தற்போதைய நத்தம் சர்வே எண். 613/3, 613/4 என்று மாறியுள்ளது என்பதை காட்டுவதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாத்தாவிற்கு ஆவணத்தின் படி வேறு எங்கோ சொத்து உள்ளது ஆனால் நான் பிரதிவாதிகளின் இடம்தான் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இடம் என்று சொல்லி வீண் உரிமை பாராட்டி பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

17) என் வீட்டின் வடக்கே உள்ள இடம் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு அதனை அவர் 1ம் பிரதிவாதிக்கு ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தார் என்று தெரிந்தும் அதனை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தகரத்தால் பாத்ரூம் செட் அமைத்தோம் என்றால் இல்லை. நான் சட்ட முரணாக செய்ததால் தான் பிரதிவாதிகள் சட்டப்பூர்வமாக அதை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

18) நான் அபகரிக்க வேண்டும் என்பதற்காக தபசிலில் தவறான அளவுகளை காண்பித்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ளதில் வா.சா.ஆ.1 முதல் 4 மற்றும் வா.சா.ஆ.17 ஆகிய ஆவணங்கள் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

19) நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் எதுவும் வா.சா.ஆ.5 ல் சொல்லப்பட்டிக்கும் சொத்திற்கு பின்னால் உள்ள இடத்திற்கு சம்பந்தம் இல்லாதது என்றால் சரியல்ல. நான் வீண்கட்சி செய்து இந்த வழக்கை தாக்கல்செய்துள்ளதால் செலவுத்தொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. பொய்யாக கட்சி செய்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.